.

<u>அரக்கோணம் நகராட்சி</u>

<u>அவசர மன்ற கூட்ட அறிவிப்பு</u>

கூட்ட எண்.65 நாள்.17.11.2020.

பொருள் : அவசர மன்ற க்கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 17.11.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

-----

அரக்கோணம் நகராட்சி 17.11.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசர மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

(ஓம்) த.ராஜா விஜய காமராஜ்
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

அரக்கோணம் நகராட்சி 2018 –ஆம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லை என்ற சான்று – மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சியில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுகழிப்பறைகள் கட்டுதல் பணிகள் மேற்கொண்டு முழுமை அடைந்த நிலையில், தற்போது திறந்தவெளி கழிப்பிடங்களற்ற நகராட்சியாக அறிவிக்க (ODF+)க்கு 29.10.2020 அன்று மன்றத்தில் தீர்மானம் அனுமதி பெறப்பட்டு பொது மக்களின் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் 15 நாட்களுக்குள் ஆணையாளர், அரக்கோணம் நகராட்சிக்கு அனுப்ப தெரிவித்து 30.10.2020 அன்று மாலைமலர் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது, தற்போது எந்த வித ஆட்சேபனையும் பொது மக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் ODF+ விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.826/2015/எச்1)

**நகர மன்ற தீர்மான எண்.797** **நாள்: 17.11.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**